முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 709**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.09.2021, செவ்வாய்கிழமை

1. ஞானசக்தியே அரங்கா போற்றி
ஞானபண்டிதன் என்வடிவான தேசிகா போற்றி
வானுலகம் வியக்க மாதர்மத்தை
வழங்கிவழங்கி வள்ளலாக திகழும் அரங்கனேபோற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரைஆசி
ஆற்றல்பட அரங்கனே கலியின்
ஆறுமுகன் என்அவதார சூட்சுமஞானி
3. ஞானியரை உலகோர் வணங்கிவிட்டால்
ஞானியாகும் வாய்ப்பு உறுதிஉறுதி
ஞானியரை வணங்கி தொடர்ந்துவிட்டால்
ஞானயுகம் படைப்பதும் உறுதிஉறுதி
4. உறுதிகொண்டு அரங்கனுக்கு நித்தம்நித்தம்
உத்தமமான சூட்சும வரம்தந்துவர
கருதிகருதி அரங்கன் வழிவழியில்
கலியுகத்தார் தொடர்ந்து வருதல்காண
5. காணவே ஞானசித்தி யோகசித்தி
கலியுகத்தை வெல்லுகின்ற மாதவசக்தியும்
சக்திகளை உலகோர் அடைந்துஇனிதே
சடாட்சர பலத்தால் உலகை வென்று
6. உத்தமராய் உலகத்தில் அரங்கன் தேடும்
உயர்ஞானியாக விளங்கி உலகமாற்றம்
மாற்றம்தனை அரங்கன்வழி செய்துமுடிப்பர்
மக்களெல்லாம் ஞானிகளாகி உலகில்திளைப்பர்
7. திளைக்கவே அரங்கன் தொடருகின்ற
தொடர்தர்மம் உலகமக்கள் ஏற்றுவர
பிழையற இந்த கலியுகந்தானும் பிரளயம் அனுகாத பாதுகாப்புமிக்க
மிக்கநல் ஞானயுகமாக மாறி மேலான ஆற்றல்களும் பெற்றுசிறக்கும்

8. சிறப்புதரும் அரங்கன் தவமுறையே
சித்தியாக கருதி ஏற்றுவிட்டால்
மறுக்காது மரணம் வெல்லுகின்ற
மறுமை போக்குகின்ற யுக்தி எளிதாய்கிட்டும்
9. கிட்டவே ஆசிதந்தேன் அரங்கனைநோக்கி
குவலயத்தாரே சடுதி வருகவருக
தட்டாது அண்ணவர் உபதேசத்தை
தவமாக ஏற்று தொடர்கதொடர்க
10. தொடர்ந்துவர உலகம் மாற்றம்பெறும்
தேசிகனை தொடர்ந்து வர
இடர்கள் நீங்கி கலியுகத்தார்க்கு
இந்தபிறவியே ஞானியாகும் வாய்ப்புகிட்டும்

ஞான அறிவுரைஆசி முற்றே

–சுபம்–